எருமைகள்

எருமைகள் சுயமரியாதை கொண்டவை.
தங்களது கருப்பு நிறத்தை
அவை
ஒரு தேசியக் கொடியைப் போல
கம்பீரமாகச் சுமந்து செல்கின்றன.
அவை
ஏழைகளை உதாசீனப்படுத்துவதும் இல்லை.
மந்திரிகளைக் கால்காசுக்கு மதிப்பதுமில்லை.
எருமைத் தோலுக்கு
சொரணை ரொம்பவும் அதிகம்.
இலேசாக விரலால் தொட்டாலும்
சிலிர்த்துக் கொள்ளும்.
எருமைகளின் மீது
எனக்கு நிறைய பொறாமை உண்டு.
உச்சி வெயிலில்
கழுத்து வரையிலும் குளத்தில் இறங்கி
நீர்த்தாவரங்களை
வாயிலிட்டு அசைபோட்டபடி
ஒரு ஜென் துறவியைப் போல
பாதி கண் மூடிய நிலையில்
தியானத்தில் இருக்கும் வாழ்க்கை
எருமைகளைத் தவிர
யாருக்கு வாய்க்கும்? --16-11-2019

